<u>19 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,</u>
<u>எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.</u>

தேதி 21.05.2026

| | |
|---|---|
| சுருக்கு வழக்கு எண் | – 5216/2024 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | –எ.த.சா. 1 |
| பெயர் | – உமாமகேஸ்வரி |
| தந்தை பெயர் | –வாசுதேவன் |
| வயது | –33 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 21.05.2026 நான் திருமதி. லஷ்மி இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை (எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)</u>

1. நான் தற்போது ஒன்றாம் எதிரி நிறுவனத்தில் பணிபுரிகிறேனா என்றால் இல்லை. நான் எதிரி நிறுவனத்தில் எப்போது பணிக்கு சேர்ந்தேன் என்றால் 2020 ஆம் வருடம் சேர்ந்தேன். எப்பொழுது அந்த நிறுவனத்திலிருந்து நின்றேன் என்றால் 2025 –ஆம் வருடம் ஆரம்பத்தில் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நின்றுவிட்டேன். நான் அந்த நிறுவனத்தில் என்னவாக பணிபுரிந்தேன் என்றால் Administration –ல் பணிபுரிந்தேன். இந்த வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தற்போது என்னிடம் காட்டப்படும் ரசீது எங்கள் நிறுவனத்துடையதா என்றால் ஆமாம். **அந்த 22.04.2021 தேதியிட்ட ரசீதின் carbon copy நகல் எதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( இந்த ஆவணத்தின் அசல் வழக்கு எண். 5214/2024 என்ற வழக்கில்**

**குறியீடு செய்யப்பட்டுள்ளது. )** தற்போது என்னிடம் காட்டப்படும் **03.08.2021 தேதியிட்ட ரசீதும் எங்கள் நிறுவனத்துடையதா என்றால் ஆமாம். அந்த 03.08.2021 தேதியிட்ட ரசீதின் carbon copy நகல் எதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( இந்த ஆவணத்தின் அசல் வழக்கு எண். 5214/2024 என்ற வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. )** இதுபோன்ற ரசீதுகள் தான் நாங்கள் எங்கள் நிறுவன வாடிக்கையாளர்களிடம் கொடுப்போமா அல்லது வேறுமாதிரி கொடுப்போமா என்றால் இது போன்றுதான் கொடுப்போம். இந்த எதசாஆ.1,2 –ல் carbon copy ஆகும் அதனுடைய அசலை கொடுத்துவிட்டு carbon copy நாங்கள் வைத்திருப்போம். எதசாஆ.1,2 நான் எழுதியதா என்றால் இல்லை. மற்றொரு Madam எழுதியது ஆகும். நான் எழுதவில்லை என்றால் எதசாஆ.1,2 எதிரி நிறுவனத்துடையது என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் எதசாஆ.1,2 எழுதும்போது நான் உடன்தான் இருந்தேன். எனக்கு அடிக்கடி வீசிங் வரும் என்பதால் எனக்கு உடல்நிலை சரியில்லை. அதனால் நான் எழுதவில்லை. உடன் இருந்த மற்றொரு madam காஞ்சனா எழுதினார். நான் உடன் இருந்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் ரசீதில் உள்ள கையொப்பம் யாருடையது என்றால் தமிழில் எழுதியது நீதிமன்றதில் ஆஜராகியுள்ள எதிரி ஆகும். அதே ஆவணத்தில் ஆங்கிலத்தில் உள்ள சொற்களை எழுதியது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள புகார்தாரர் ஆகும். அதற்கு கீழே சிவமணி Team என்று உள்ள வார்தைகளை Administration –ல் உள்ளவர்கள் எழுதி இருப்பார்கள். **மேற்படி 30.01.2024 தேதியிட்ட ரசீது நகல் எதசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ( இந்த ஆவணத்தின் அசல் வழக்கு எண். 5214/2024 என்ற வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. )** ( எதசாஆ.3 ஆவணத்தில் பின்பகுதியில் உள்ளதை குறியீட செய்யவில்லை என எதிரி

தரப்பில் சொல்லப்பட்டது. ) எதசாஆ.3 எவ்வளவு தொகைகான ரசீது என்றால் ரூ. 4,50,000/– –ற்கான ரசீது ஆகும். இந்த தொகை ரொக்கமாக கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். எங்கு வைத்து இந்த பணம் கொடுக்கப்பட்டது என்றால் எதிரியின் அறையில் வைத்து கொடுக்கப்பட்டது. அந்த பணம் கொடுக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் நான்தான் பணத்தை மெஷினில் போட்டு கொடுத்தேன். எதிரி அந்த பணத்தை என்னிடம் இருந்து வாங்கி கொடுத்தார். இதுபோன்று தான் பணம் மற்ற வாடிக்கையாளர்களுக்கும் கொடுப்போமா என்றால் ஆமாம். இந்த வழக்கின் புகார்தாரர் எதிரிக்கு close என்பதால் புகார்தாரர் எப்போதும் நேராக எதிரியின் அறைக்கு சென்று அவரை பார்பார். முறையான ரசீது வாங்காமல் எதசாஆ.3 ரசீதை எதற்காக வெள்ளைத்தாளில் வாங்கினோம் என்றால் அன்றைய தினம் 6 மணி ஆகிவிட்டது. எதிரி வாடிக்கையாளர் ஒருவர் வருவதாக சொன்னார். அப்போது புகார்தாரர் நேராக வந்து எதிரியின் அறைக்கு சென்றுவிட்டார். ரொக்கம் எடுக்கும்போது என்னை அழைத்ததால் நான் உள்ளே சென்றேன். பின்னர் பணத்தை புகார்தாரர் வாங்கியபின்னர் அவருக்கு நேரம் ஆகிவிட்டது என்று சொன்னதால் வெள்ளைப் பேப்பரில் எழுதி வாங்கப்பட்டது. புகார்தாரர் நம்பிக்கையானவர் என்பதால் அவரிடம் Voucher வாங்காமல் வெள்ளைப்பேப்பரில் எழுதி வாங்கப்பட்டது. வாடிக்கையாளர்களுக்கு G–pay மூலம் பணம் அனுப்பட்டுள்ளதா என்றால் எதிரி மற்றும் அவருடைய மனைவி வங்கி கணக்கில் இருந்து அனுப்பபட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்ன என்றால் G–pay மூலம் பணம் அனுப்பியதற்கான ஆவணம் ஆகும். மேற்படி பரிமாற்றங்கள் சில நேரங்களில் எதிரி செய்வார் சில நேரங்களில் நாங்கள் செய்வோம். **மேற்கண்ட Whats app மற்றும் G–pay மூலம் பரிமாற்றம்**

**செய்யப்பட்தற்குரிய screenshot நகல் எதசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய ஆதார் அட்டை நகல் எதசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

(புகார்தாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்து காட்டி சரி என்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது,

**Sd/- Mrs. P. Magalakshmi, M.L.,**

XIX Metropolitan Magistrate,
Egmore @ Allikulam, Chennai-03.